சிவாஜி

இந்த வாரத்தில்

அனுபவ ஞானியின் குறிப்புகள்

சத்ரபதி சிவாஜியின் கதை

முபாரக் பில்ஹணா-பட விமர்சனம்

சிறுவர் மலர்—எட்டு பக்கங்கள்

மற்றும் பல அம்சங்கள்

வேதாந்தியின் மணிவாசகம்

மத்திய கிழக்கு மண்டலத்தில் சிரிய—லெபனான் குடியரசுத் தலைநகரான பேய்ரூட் நகரில் ஐக்கிய நாடுகள் கல்வி-விஞ்ஞான—கலாசார ஸ்தாபன மகாநாட்டில் டாக்டர் சர் எஸ். ராதாகிருஷ்ணன் பிரசங்கத்தின் பகுதிகள் கீழே தரப்பட்டிருக்கிறது.

ஆத்மீகம்

“நமது ஸ்தாபனம் உலக மக்களின் கலாசார அபிவிருத்தியில் நாட்டம் கொண்டிருக்கிறது. கலாசாரம் வளர்ச்சியடைவதற்கு ஆத்மிகக் கோட்பாடுகளும் கருத்துக்களும் மதிக்கப்பெறவேண்டும். நம்மில் சிலர் தமக்குள்ள பொருட்துறைச் செல்வச் செழிப்பால் ஆத்மீக அடிப்படை அம்சங்களை அலட்சியம் செய்துவருகிறோம்; பொருட் செல்வத்தால வந்த பெருமை நம் கண்ணை மறைக்கிறது. மனித வாழ்க்கைக்கு ஆணிவேரான ஆத்மீகத் துறை, அறிவுத் துறை அம்சங்கள் இல்லையானால், பொருட்செல்வ போக போகியங்களான இலைகளும் மலர்களும் உலர்ந்து சருகாகி விழுந்துவிடும்; மனித வாழ்க்கை பசையற்ற மொட்டை மரமாகிவிடும்.

அணுகுண்டு

“நமது நோக்கம் மக்களை அறிவுத் துறையில் மேம்பட வைக்கவேண்டுமென்பதே. ஆனால் நமது அறிவு, விஞ்ஞான அறிவு, நம்மை அழிவுப் பாதையில் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு நாடும் கொடிய கொலை ஆயுதங்களைத் தயாரிப்பதற்காகத் தன் தேசீய செல்வத்தைச் செலவிட்டு வருகிறது. செல்வபலம் ஏராளமாக உள்ள நாடுகள் ஆயுத உற்பத்திக்காக அதிகப் பணத்தைச் செலவிட்டாலும் மக்களின் வாழ்க்கைத் தரம் கெடாதபடியும், இன்றியமையாத கல்வி வசதி சுகாதார வசதி, வாழ்க்கை வசதிகளுக்குக் குறை ஏற்படாதபடியும் பார்த்துக்கொள்ளக் கூடும். ஆனால் யுத்த பயங் காரணமாக ஏழை நாடுகளும் தங்கள் சுருங்கிய பணவசதியை இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கே செலவிட வேண்டியதாய் ஆகிவிட்டிருக்கிறது. அணுகுண்டு வெடிக்கும் போது ஆயிரக்கணக்கான பேர்கள் அரைநொடியில் மடிந்துவிடுவார்கள். அது வெடிக்கும் இடத்தில் ஒன்றுமே எஞ்சியிருப்பதில்லை.

உயிரற்ற சடலங்களைக்கூடக் காண முடியாது. இதுவரையிலும் நாம் தெரிந்திராத அளவு உஷ்ணமுள்ள உக்கிர நெருப்பு, கட்டடங்களையும் மனித உடல்களையும் பொடி சாம்பலாக்கி ஒன்றுமே இல்லாதவாறு செய்துவிடுகிறது என்பதாக அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானி கூறுகிறார். இத்தகைய அணுகுண்டு சென்ற யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதை உபயோகிப்பதற்கிருந்த காரணங்களும் நியாய நியாயங்களும் மற்றுமொரு யுத்தம் உண்டாகும்போதும் அப்படியே இருந்துவரக்கூடும். மனித உலகம் தனது பக்க வளர்ச்சியை இழந்து மெலிந்துவிட்டது. மார்க்ட்வெயின் என்ற ஆசிரியர் தமது நூல் ஒன்றில் சைத்தான் வாய்மொழியாக இகழ்ந்து கூறுவதுபோல் “மூடன் எவனும் கொடிய செயலைப் புரிவதில்லை. ஒழுக்க அறிவு நிரம்பியவர்களின் ஏகபோக உரிமையே அச் செய்கை.”

பெரிய மாயை

“தற்கால யுத்தம் பெருந்திரளான மக்கள் சேர்ந்து செய்யவேண்டிய காரியம். எனவே மக்களின் மனதை அதற்கென விசேஷமாகத் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. ஏதோ தங்களுக்கென ஒரு தனிவாழ்க்கை முறை இருப்பதாகவும் தங்களுக்கு வேறுபட்ட, மாறுபட்ட வாழ்க்கை முறையுள்ள மக்களால் அதற்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லி அவர்களைச் சரிப்படுத்த வேண்டியிருக்கிறது. இத்தகைய போலி நியாய வாதங்களால் மக்களின் மனச் சாட்சி பலனழிக்கப்பட்டு மக்கள் பிரமாண்டமான ஒரு அரசாங்க யந்திரத்தின் கைக் கருவிகளாக ஆக்கப்படுகின்றனர். நாம் இன்று நம்மை ஒரு பெரிய மாயையில் அழுத்திக்கொண்டு வருகிறோம். ஏதோ பேராபத்தும் அழிவும் நம்மை எதிர்நோக்கியிருப்பதாகக் கருதிக்கொண்டு அதைச் சமாளித்து வெற்றி காண்பதாக எத்தனம் செய்து வருகிறோம். அந்த ஆபத்து வந்து தீரவேண்டியதே விதி என்று உண்மையாக எண்ணி விதியை எதிர்பார்க்கும் மனப்பான்மை கொண்டவர்களாக ஆகிவிட்டோம். இதெல்லாம் நல்லதற்கு அறிகுறியல்ல. உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் சாதாரணப் பெருமக்களின் ஆழ்ந்த நம்பிக்கையை, அமைதியும் சமாதானமும் நிலவும் உலகில் வாழலாம் என்ற பெரு விருப்பத்தை, நாம் சிதறடித்து அவர்களை ஏமாற வைக்காமல் இருக்கவேண்டுமானால் நாம் இப் பிரச்னையை மக்கள் குலத்தின் நன்மையைக் கருத்திற்கொண்டு கவனித்துத் தீர்க்கவேண்டும்.

நாம் திருந்தவேண்டும்

“அரசியல் நெருக்கடியும், கொள்கை முரண்பாடுகளும், மனம் இடிந்து நைந்த உள்ளமும், நம்பிக்கை இழந்த வாழ்வும், சுட்டெரிக்கப்பட்ட நிலமுமாக இவ்வுலகமும் மக்களும் காணப்படும் இந்த அவல, ஆபத்து நிலையில் யுனெஸ்கோ தனது பணியைப் புரியவேண்டியதாய் இருக்கிறது. உலக அமைதியிலும் ஒழுங்கிலும் நம்பிக்கைகொண்டுள்ள நாம் தயங்காமல் மனந்துணிந்து வாய்விட்டு நமது கருத்தைப் பறைசாற்ற வேண்டிய தருணம் இதுதான். ஜெர்மனியையும் ஜப்பானையும் புதிய முறையில் பயிற்றுவிக்க வேண்டும் என்று கூறும் நாம் அந்நாடுகள் சென்ற அதே பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறோம். நாம் சொல்லும் உபதேசப்படி நடப்பதாக இல்லை. நமது குற்றத்தை நாம் முதலில் திருத்திக்கொள்ள வேண்டும்.”

விலை அணா 2



முதல் அத்தியாயம்

ஹோலி பண்டிகை

1559-ம் ஆண்டில் இளவேனிற் காலம். அஹமத் நகர ஹிந்துக்கள் ஹோலி பண்டிகை கொண்டாடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அற்புதமான மாளிகை. அம் மாளிகை அன்று இன்னும் அதிக மிடுக்குடன் திகழ்ந்தது. எங்கே பார்த்தாலும் ஸர விளக்குகள் ஒளி பூத்து மின்னிக்கொண்டிருந்தன. அவற்றினின்று படர்ந்த ஒளி அந்த மாளிகையையே ஒரு பிரம்மாண்டமான ஒளி மலராகச் செய்துகொண்டிருந்தது.

வாழை மரங்களும், மாவிலைகளும், நறுமலர்களும் இந்த ஒளிச் செருக்கினூடே பசுமை படர வைத்துக் கொண்டிருந்தன.

நாதஸ்வரத்தினின்று எழும்பிய இசை வானுலகத்திலிருந்து பூவுலகுக்கு இறங்கி வந்த கின்னர நாத நாதம் போன்று கேட்பவரைச் சிலிர்க்க வைத்துக்கொண்டிருந்தது.

குங்குமம் சிரிக்கும் வெள்ளை வெளேரென்ற இளந் தேங்காய்களைச் சிறிய தம்பளங்களில் ஏந்தி குங்குமம் மலர்ந்த முக விலாசங்களுடன் கன்னியரும், மடந்தையரும் குறுக்கும் நெடுக்குமாக உலவி வந்தனர். குத்து விளக்கின் சுந்தர ஜோதியுடன் அவர்களது பூரிப்பு போட்டியிட்டுக் கொண்டிருந்தது.

மாளிகையின் நடுக்கூடம் அன்று நடந்த கோலாகலங்களின் இதயமாகத் துலங்கியது.

தேவகாந்தாரியின் ஸுநாதம் அக் கூடத்தினுள் பிரவேசிப்பதற்கு நடுங்குவது போல் தோன்றியது. அங்கே வெடித்துத் தெறித்துக்கொண்டிருந்த சிரிப்பொலியும், ஆட்ட பாட்டமும் அந்த மெல்லிய இசையைத் தன்னுள் ஆட்கொண்டு அடக்கிவிட்டது.

ஃ ஃ ஃ

"ஏ, நாட்டியராணி, அபிநயம் பொருத்தமாக இல்லையே. இன்னும் கொஞ்சம் புருவத்தை நன்றாக நெளிக்க வேண்டும். வலது கைச் சுண்டு விரல் இன்னும் சரியாக நெகிழவில்லையே," என்று கொண்டே ஒரு கம்பீர புருஷர் கூடத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். ஒரு பகுதியில் நடனமாடிக் கொண்டிருந்த ஒரு நடன மாதை அவர் அப்படித் திருத்திவிட்டுச் சென்றார்.

அவரது தலையில் கிரீடம் போல் அமர்ந்திருந்த ஜரிகைத் தலைப்பாகையும் மேலே போர்த்திருந்த பீதாம்பரமும் அவர் சாதாரண மனிதரல்ல என்பதை எடுத்துக் காட்டியதோடு, அந்தக் களியாட்டங்களை மேற்பார்வை பார்க்கும் தோரணையில் நடந்துகொண்டது அவரே அந்த மாளிகையின் போக போக்கியங்களுக்கு அதிபதி என்றும் நிரூபித்தது.

அவர் பெயர் லாகோஜி.

நடன ராணியைத் திருத்திய பிறகு லாகோஜி அக் கூடத்தின் நெருக்கடியான பகுதிக்குள் நுழைந்தார். அந்தக் குதூகலக் குழப்பத்தில் கலந்து கொள்ளவே அவர் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

பேரப்பிள்ளைகளுக்குத் திருமணம் நடத்திவைக்கக் காத்திருக்கும் விருத்தாப்பியர்களும், அரசியல் அரங்கத்தில் ஆதரிச புருஷராக விளங்கிய நடுத்தர வயதினரும், வர்த்தகத்தின் அரவணைப்பில் உடலும் மனமும் எல்லை தெரியாமல் பூரித்த கோமான்களும் குழந்தைகளாகிக் கொம்மாளமடித்துக்கொண்டிருக்கும் குழப்பத்தில் கலந்து கொள்ளவே லாகோஜி முண்டி முனைந்து முன்னேறிக்கொண்டிருந்தார்.

அருகருகே உயரமான பாத்திரங்களில் வழிந்து நின்ற மஞ்சள் நீர் தவலைகளுக்குள் நுழைந்து காற்றில் குறுக்கும் நெடுக்கும் வாயுவேகத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தது.

குழப்பத்தில் நுழைந்த லாகோஜியின் முகத்தில் அபிஷேகம் செய்ததுபோல் ஒரு தவலை மஞ்சள் நீர் வந்து விழுந்தது. அந்தத் தாக்குதலைச் சட்டென்று சமாளிக்க அவர் கண்களை இறுக மூடிக்கொண்டு, புருவத்தை நெளித்துக்கொண்டார். மேலே போர்த்தியிருந்த பீதாம்பரத்தை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

இந்த விநோத விபத்தை எதிரேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த சம வயதினர் ஒருவர் கலீரென்று மனம்விட்டுச் சிரித்தார். அவரது சிரிப்பொலி அங்கு நிரம்பியிருந்த மற்ற கூச்சலையெல்லாம் கபளீகரம் செய்து மேலே கிளம்பியது.

இந்தச் சிரிப்பொலியைக் காதில் வாங்கிய லாகோஜி மூடியிருந்த தம் கண்களை இலேசாகத் திறந்தார்.

"என்ன, மாலோஜி, சிரிப்பாக இருக்கிறதா?" என்று கேட்டார் லாகோஜி. அவர் உண்மையில் கோபித்துக்கொள்ளவில்லை. அவர் வதனத்தில் புன்முறுவல் கூட அரும்பியிருந்தது.

"நமஸ்தே லாகோஜி, நமஸ்தே! ஹோலி பண்டிகையன்று சிரிப்பதைத் தவிர வேறென்ன செய்வது?" என்று கேட்டார் மாலோஜி. அவரது குரலிலும் கம்பீரத்வனி நிறைந்திருந்த போதிலும் ஸ்வரம் சற்றுத் தாழ்ந்துதான் இருந்தது.

இந்தச் சிறிய குரல் பேதமே இருவரது சமூக ஸ்தானத்துக்குமுள்ள பேதத்தை எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது.

மாலோஜியும் உயர்ந்த ஆடையாபரணங்கள்தான் உடுத்தியிருந்தார். ஆனால் லாகோஜியின் பீதாம்பரத்தின் முன்னர் அவரது பட்டாடை சூரியனுக்கு முன் மலர்ந்த நிலவைப்போல் தான் இருந்தது. மாலோஜி தமது ஸ்தானத்தை ஸ்தாபித்துக்கொள்பவர் போலும், தமது அந்தஸ்தை ஞாபகப்படுத்திக் கொள்பவர்போலும் உடைவாளை ஒருமுறை வலதுகையால்தொட்டுப் பார்த்துக்கொண்டார்.

"கூ... கூ... கூ..." என்ற ஒரு கீச்சுக்குரல் அந்தக் களியாட்டத்தை ஒருகணம் ஸ்தம்பித்து நிற்கச் செய்தது. மாலோஜியும், லாகோஜியும் மற்றெல்லோரையும் போலவே அந்தக் கீச்சுக்குரல் வந்த திக்கை நோக்கி அசையாமல் நின்றிருந்தனர்.

"கூ... கூ... கூ..." என்று மறுமுறையும் அதே சப்தம் கிளம்பியது ஐந்து வயதுச்சிறுமி யொருத்திதான் அந்தக் கீச்சொலியின் நாயகி.

அவள் அந்தக் குரலெழுப்பலோடு நின்றுவிடவில்லை. கையிலிருந்த சிறிய செம்பில் தளும்பிக்கொண்டிருந்த மஞ்சள் நீரைப் பக்கத்தில் நின்றிருந்த சிறுவன் மேல் இறைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

அந்தச் சிறுவன் இத் தாக்குதலைக் கண்டு சளைப்பவனாயில்லை. தன் சிறு வாயில் கொப்பளித்துக்கொண்டிருந்த மஞ்சள் நீரை வாணம் விடுவதுபோல் அவளது பசுமையும், வெண்மையும் கோர்த்த பட்டாடையின் மேல் ஊதிவிட்டான்.

ஸ்தம்பித்து நிசப்தமாக நின்று கொண்டிருந்த பெரியோர் அனைவரும் அதிர்வெடி கிளம்பியது போல் ஒரே ச்ருதியில் சிரித்தார்கள். சிரிப்பு அடங்குவதற்கு வெகுநேரம் பிடித்தது. மற்றவரது சப்தஜாலம் அடங்கிய பிறகுகூட மாலோஜி தன் சிரிப்பை அடக்கவில்லை.

அந்தக் குழந்தைகள் மேலும் தமது விளையாட்டைத் தொடர்ந்து நடத்தின. பெரியவர்கள் விளையாட சிறுவர் சிறுமியர் வேடிக்கை பார்க்கும் அந்த விநோத விழாவில் இது வழக்கினின்று விடுபட்ட அற்புதமாகத்தான் இருந்தது.

லாகோஜி மாலோஜியின் அளவுகடந்த குதூகலத்தை அப்போதும் கவனித்தார். எனினும் இப்போது ஒன்றும் கூறவில்லை. அவர் காதுகள் இந்த நீண்ட சிரிப்பொலியில் ஆழ்ந்திருந்தனவே தவிர கண்கள் அந்தச் சிறுமியையும், சிறுவனையும் மாறி மாறிபார்த்துக்கொண்டிருந்தன.

(தொடரும்)

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

திருச்சி வெலிங்டனில்
4—12—48 முதல்
மகத்தான 2-வது வாரம்
T. S. துரைராஜ்
நடிக்கும்

பிழைக்கும் வழி

— நடைபெறுகிறது —

சிவாஜி

ஆசிரியர் :— திருலோக சீதாராம்

மாலை 14 | திருச்சி, 5—12—48 சர்வதாரி-ஞு கார்த்திகை-மீ, 20-உ | மணி 1

அரசாங்கத்திற்காக போர் செய்ய உபதேசம் செய்கிறர்கள் அரசர் தேசத்திற்காக தியாகம் செய்ய உபதேசிக்கிருர்கள் தேசத் தலைவர்கள்
ஆனல் இதுவரை
பிழைக்கும் வழியை
யாரும் உபதேசித்ததில்லை
அதை டி. எஸ். துரைராஜ் சிங்காரமாகச் சித்தரிக்கிறர் திருச்சி வெலிங்டனில் நடக்தும்
"பிழைக்கும் வழி"யில் !

விஜயவாடாவில் பிரதமர் ரெட்டியாரின் கலையொலி

வானெலியின் விஸ்தாரம்

சென்ற புதன்கிழமையன்று மாலை சென்னைமாகாணத்தில் புதியதொரு வானெலிக் குரல் முதன் முதலாகக் கேட்டது.

"இது விஜயவாடா" என்ற அறிவிப்புடன் ஆரம்பமாகிய விஜயவாடா வானெலி நிலையத் திறப்புவிழா நமது மாகாணப் பிரதமர் ஓமந்தூர் ரெட்டியாரது கலைச்செறிவு நிறைந்த தெலுங்குச் சொற்பொழிவின் மூலம் சிறப்புற்றது என்று கூறலாம்.

நம் நாட்டின் புதிய வானெலி நியாயங்கள் பல நிர்மாணிக்கப் பட வேண்டுமென்ற மத்திய அரசாங்கச் செய்திஇலாகாவின் திட்டத்தின் கீழ் உருவாகியிருக்கும் புதிய வானெலி நிலையம் விஜயவாடா.

விஜயவாடா வானெலி நிலையத்தின் உதயம் சென்னை நிலையத்தை இதுகாறும் நெருக்கி வந்திருக்கும் ஒலிபரப்புக் குழப்பத்தினின்று விடுவிக்குமானல் அதுவே மகத்தான காரியமாகும். இந்தக்காரியத்தை விஜயவாடா நிலையம் சாதிக்கும் என்றே நம்புகிறேம்.

சென்னை, திருச்சி என்ற இரு நிலையங்களில் சென்னையைவிடத் திருச்சியே அதிக வெற்றியுடனும், உபயோகத்துடனும் வேலை செய்துவந்திருப்பது ரேடியோ 'ரஸிகர்'களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

தமிழ்—தெலுங்கு மொழியுரிமைத் தாராதரத்தை ஒலிபரப்பிலும் முனைப்பாக கவனிக்கவேண்டிய சங்கடத்தால் சென்னை நிலையம் கற்பனையே அற்ற யந்திரம்போல் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வந்திருக்கிறது. விஜயவாடாவின் தோற்றம் சென்னைக்கு மூச்சு விடவும், சிந்தனை செய்யவும் நேரம் கொடுக்கும் என்றே நம்புகிறேம்.

ஃ ஃ ஃ

பிரதமர் ராமசாமி ரெட்டியார் செய்த விஜயவாடா ரேடியோப் பிரசங்கம் வானெலிக் கலைஞருக்கும், நிர்வாகிகளுக்கும் நல்ல புத்திமதிகளை சுமந்து காற்றிலே மிதந்தது.



மோட்டார்கள் பிரிட்டிஷ் கப்பற்துறையில் கப்பலேறக் காத்திருக்கின்றன

"கலையும் பண்பாடும் ரத்ன கம்பளம் பரப்பிய ஓய்வறைகளினின்று ரேடியே கேட்கும் ரஸிகர்களுடைய தனிச் சொத்தல்ல என்பதை வானெலிக் கலைஞர் உணரவேண்டும்," என்று பிரதம ரெட்டியார் வற்புறுத்தியதுடன் எழுத்தின் மூலம் நம் நாட்டில் சாதிக்க முடியாத காரியத்தை வனெலி மூலம் எங்ஙனம் சாதிக்கமுடியும் என்பதையும் விளக்கினர்.

ஆரம்பத்தில் வானெலி நிலையங்கள் எவ்வளவோ ஊக்கத்துடனும், பொது ஜன சேவையுணர்ச்சியுடனும் தொண்டாற்ற முனைந்தாலும் காலப்போக்கில் அரசாங்கத்தின் மற்ருெரு இலாகா என்ற முறையில் அலட்சிய பாவமும், யந்திரம்போன்ற நெளிவற்ற தன்மையும் கொண்டு விடுகின்றன என்று நியாயமாகச் சாட்டப்படும் குற்றத்தைப் பிரதமர் ரெட்டியார் ஏற்றுக் கொண்டு இந்தக் குற்றம் வளராமல் அக்கரையாக நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக் காட்டினர்.

ஃ ஃ ஃ

வானெலி நிலையங்களை அதிகப்படுத்துவது திட்டத்தின் ஒரு பகுதியானலும், அதைவிட முக்கியமான பகுதி ஒன்றிருக்கின்றது. அதுதான் நிறையப்பேர் ரேடியோ கேட்கக்கூடிய வசதி செய்வது. இதுதான் அதிக விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் இதில்லாமல் வானெலியின் உபயோகமே வீணடிக்கப்பட்டதாகிவிடும். மின்சார விஸ்தரிப்பு, மலிவான ரேடியோக்கள் உற்பத்தி போன்ற வேறு சில விஷயங்களையும் இது தொட்டுச் செல்வதால் இவற்றை யெல்லாம் ஒருங்கே கவனித்துச் செயலாற்றவேண்டும்.

கலைஞர் கடமைகள்

இவ்வளவையும் செய்துவிட்டு வரனெலியில் "காதல் நாடகங்களும்," "கச்சடாக் கதைகளும்" ஒலிபரப்பிக் கொண்டிருந்தாலும் அவ்வளவும் வீணுகத்தான் போகும்.

கலை, விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் என்று பாத்தி கட்டி பம்மாத்துப் பண்ணுவது உபயோகமானதல்ல. இவற்றைக் குழைத்து ரஸனையுடன் சாதாரண ஜனத்துக்குப் புரியும் வகையில் கொடுக்கவேண்டும். ஆகர்ஷண தத்துவம்பற்றி வெறும் பிரசங்கம் செய்விப்பதைவிட இனிய கதையின் மூலம் அதை விளக்கலாம். கோழிவளர்ப்பு பற்றி இசைச் சித்திரம் வரைந்தால் அது கலைக்கும், கருத்துக்கும பொருத்தமான சாதனையாயிருக்கும்.

திருச்சி ரேடியோ நிலையம் இத்தகைய முயற்சிகளைச் செய்திருப்பது குறித்து நாம் மகிழ்வெய்துகிறேம். இத்தகைய கலைத்திருப்பம் வானெலியின் மூலம் ஏற்பட்டால் பலனுடனும், அதிக உபயோகத்துடனும் விளங்கும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேம்.

வானெலி ஒரு மகத்தான சாதனம். அதை நாம் நன்ருகப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். அதன் மூலம் விளையக் கூடிய உறுபயன் என்னவென்பதை உண்மையான சீர் திருத்தத்தின் மூலமே காணமுடியும்.

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்

6—12—48 முதல் 6-வது வாரம்
நாளுக்கு நாள் அதிகரித்த புகழுடன் நடைபெறுகிறது

ஜுபிடர் "மோகினி" தமிழ்படம்

V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை,
லலிதா, பத்மினி நடித்தது
தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு

அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

முன்னுரை

அதிசய மனிதர்

1946-ல் என்று நினைக்கிறேன். கோவை எழுத்தாளர் சங்கத் தலைவராக விளங்கிய கஸ்தூரி மில் ஸ்ரீநிவாசன் அவர்களைச் சந்திப்பதற்காக நானும் வசந்தம் ஆசிரியர் திருஞானமும், சென்றிருந்தோம். திரும்பும்போது அவனுசிரோட்டில் 'கோபால் பாக்' என்ற பிரசித்தி பெற்ற மாளிகையைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குமுன்பு அங்கு நடைபெற்ற எழுத்தாளர் மகாநாடு பற்றிய நிகழ்ச்சிகளும் "கோபால் பாக்" வாசியான திரு ஜி. டி. நாயுடு அவர்களின் உபசரிப்பும் நினைவுக்கு வந்தன. அந்த அற்புத மனிதரை மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டுப்போகலாமேயென்று என் ஆவலை வெளியிட்டேன். 'ஓம்' என்று உரைத்தார் திருஞானம்.

விஸ்தாரமான அந்த வாயிலைக் கடந்து செல்லுமுன்பு நாங்கள் தடுத்து நிறுத்தப்பட்டோம். வயது முதிர்ந்த காவலாளர் ஒருவர் எங்கள்முன் நின்றார். நாயுடு அவர்களைக்காணமுடியாதென்று கூறினார் அவர். ஏன் என்று கேட்டதற்கு அங்கிருந்த விளம்பரப்பலகையை சுட்டிக்காட்டினார். அதிலிருந்த வாசகங்கள் அப்படியே நினைவில்லை. கருத்து இதுதான் :—

"1948-ம் ஆண்டுமுடிய இங்கு யாருக்கும் எந்தவிதமான உதவியோ, தருமமோ, ஒரு டம்ளர் தண்ணீரோகூடக் கிடைக்காது. நன்கொடைகளோ, யாசகங்களோ எந்த விதமான உதவிகளோ நாடி யாரும் வீணில் இங்கு காத்திருக்கவேண்டாம். முன்கூட்டிக் கடிதம் மூலம் அல்லது டெலிபோன் மூலம் வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி யாரும் உள்ளே வரக்கூடாது" அந்த விளம்பரத்தைப் பற்றி எங்களுக்குக்கவலையில்லையென்றும் எங்களுக்கு முன்கூட்டி அழைப்போ அனுமதியோ இல்லாவிடினும் அவருடைய உதவியையோ நன்கொடையையோ நாடி நாங்கள் வரவில்லையென்றும் சும்மா பார்த்துவிட்டுப் போக வந்தோமென்றும் தெளிவுபடுத்தினோம். ஆயினும் அவர் எங்களை உள்ளே விட மறுத்துவிட்டார் பிறகு, எங்கள் பெயர் எழுதிய சீட்டையாவது உள்ளே கொண்டுபோய்க் காட்டினால் அவர் வர அனுமதிப்பார் என்று உறுதி கூறினோம். ஆனால் அங்கிருந்த நமூனாவைத்தான் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டுமென்று அந்தக்காவலர் கூறினார்.

சாதாரணமாக நகர வாழ்க்கையில், வர்த்தகக் காரியாலயங்களிலோ, அரசாங்க அலுவலகங்களிலோ யாரையாவது காண விழைவோர் தங்கள் பெயரையும் யாரைக்காணவேண்டுமென்பதையும் இன்னகாரியம் என்ற குறிப்பையும் எழுதி வாயில்காப்போர் மூலம் சம்பந்தப்பட்டவருக்கு சீட்டு அனுப்பும் முறையுண்டு. இங்கே நாயுடு அவர்களைக்காண்பதற்கு நாங்கள் பூர்த்தி செய்யவேண்டியிருந்த நமூனா அசாதாரணமானது. மாதிரிக் கேள்விகளும் எங்கள் விடையும் இதோ தருகிறேன்.

முன் கூட்டி கடிதம் மூலம் வர அழைப்புப் பெற்றிருக்கிறீர்களா? இல்லை

டெலிபோனிலாவது அழைப்புண்டா? கிடையாது.

என்ன காரியமாகப்பார்க்க வேண்டும்? சும்மா

இப்படி எத்தனையோ கேள்விகள். இப்போது சரியாக நினைவில்லை. எங்கள் சீட்டை உள்ளே கொண்டு சென்றவர் திரும்பி வந்து எங்களை உள்ளே அழைத்துச்சென்றார்.

நாயுடு அவர்கள் உடல் நலமின்றி ஒரு கட்டிலில் படுத்திருந்தார். எங்களைக் கண்டதும் முறுவல் பூத்தார். 'உட்காருங்கள்' என்று எதிரேயிருந்த ஆசனங்களைச் சுட்டிக்காட்டினார். உட்காராமலேயே திருஞானம் "இல்லை, நாங்கள் போய்வருகிறோம்" என்று திருப்ப எத்தனித்தார். "என்ன, வந்தீர்கள், உடனே புறப்படுகிறீர்கள்?" என்று வியப்புடன் வினவினார் நாயுடு. திருஞானம் "தாகமாயிருக்கிறது, ஆகையால் நாங்கள் போகிறோம்" என்று கூறியவாறு இரண்டடி எடுத்துவைத்தார். மீண்டும் நாயுடு "தாகமாயிருந்தால், அதற்காகப்போவானேன்?" சற்று நின்றார் திருஞானம், "எங்களுக்கு ஒரு உதவியும் உங்களிடம் தேவையில்லை. சும்மாபார்க்கத்தான் வந்தோம். பார்த்தாயிற்று. தாகத்துக்கோ இங்கு ஒன்றும் கிடைக்காது ஆகையால்......."

இந்தத்தடவை நாயுடு சிரித்துவிட்டு "அந்தப்போர்டில் கண்ட நிபந்தனைகளை உங்களுக்காகமட்டும் இப்போது தளர்த்துகிறேன். உட்காருங்கள், போகலாம்" என்று எழுந்து உட்கார்ந்தார். நாங்களும் சிரித்தோம். குளிர்ந்த பானம் எங்களுக்கு வழங்கப்பட்டது. போர்டு விஷயமாக இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவையாக இருந்தது எங்களுக்கு. நாயுடு சொன்னார் "அது பெரியகதை. பிறகு சாவகாசமாய்ச் சொல்லுகிறேன். தெரிந்துகொள்ளவேண்டுமானால் இன்று பூராவும் நீங்கள் இருவரும் என்னுடன் தங்கியிருங்கள் என்று" நாங்களும் சம்மதித்தோம். வேறு வேலைகளை வைத்துக்கொண்டு நாயுடு அவர்களிடம் போய்ப்பயனில்லை.

நாயுடு அவர்களைப்பற்றி அன்று நாங்கள் பல உண்மைகளைத் தெரிந்துகொண்டோம். சிறு குழந்தையைப்போன்ற உற்சாகத்துடன், தன்வாழ்க்கை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை, ஆதார பூர்வமாகவும் அனுபவபூர்வமாகவும் அவர்எடுத்துக் காட்டியபோது பொழுது போவது தெரியாமல் இரவு 11 மணிவரையிலும் உணவு வேளை தவிர அவருடன் சல்லாபித்துக் கேள்விகள் கேட்டு விடைபெற்றோம். விளக்கம் பெற்றோம்.

* * *

திரு. நாயுடு அவர்கள் தமிழ் நாட்டின் தலைசிறந்த விஞ்ஞான மேதை. அவர், வாழ்வின் கீழ்க்கடையிலிருந்து ஆரம்பித்துத் தன் அறிவாலும் உழைப்பாலும் விஞ்ஞானத் துறையிலும் செல்வத்திலும் உயர்வடைந்தவர். நாயுடு அவர்களைப் பற்றித் தமிழ் மக்கள் கேள்விப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவரை அறிந்தவர்கள் யாராவது உண்டா என்பது சந்தேகம்தான். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குக் கூட விளங்காத ஒரு புதிராகத்தான் அவர் இருக்கிறார். வெகு வேகமாகப் பரிணாமப் படிகளில் உயர்ந்து சென்று அதி

(அடுத்த பக்கம் பார்க்க)

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் சூலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய சூலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

அதிசய மனிதர்

(முன பக்கத் தொடர்ச்சி)

மானுட நிலையைத் தொடும் ஒரு சாதகராகவே அவரை நான் மதிக்கிறேன். உலகை அவர் பார்க்கும் கோணமும், அவரது நுண்ணறிவின் செயல் முறைகளும் நாம் நன்கு உணரவேண்டியவை. அவருடைய சொற்பெருக்குகளிலும் பொருள் பொதிந்த கடிதப் போக்குவரத்துக்களிலும் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் பல அரிய உண்மைகளை இந்தப் பகுதியில் வாரம் தோறும் தொகுத்துக் கொடுப்பது வாசகர்களுக்குப் பயன் தரும் என்று கருதுகிறேன்.

நாயுடு அவர்களை நான் நேரில் காணும் முன்பு கேள்விப்பட்டதெல்லாம் வெறும் அற்புதங்கள். அதாவது கட்டுக் கதைகள். புதுச்சேரியில் அரவிந்தர் என்ன செய்கிறார் என்ற கேள்விக்குப் பாமர மக்கள் எவ்வளவு கதைகள் ஜோடிக்கிறார்களோ அவ்வளவு கதைகள் நாயுடு அவர்களைப் பற்றியும் பரப்பியிருக்கிறார்கள்.

நாயுடு அவர்கள் சாதாரண நிலையிலிருந்து மிகப் பெரும் செல்வராக உயர்ந்திருக்கிறார். இதை "அதிர்ஷ்டம்" என்று முடிவு கட்டிவிட்டுப் பெருமூச்சு விடுவோர் சிலர். "நோட்டு அச்சடித்துப் பணம் சேர்த்துவிட்டார்" என்று காற்றில் 'கப்ஸா' விட்டவர்கள் சிலர். "புதையல் கிடைத்திருக்கும்" என்று சமாதானம் கூறியவர் சிலர். பாமர மக்கள் தான் இப்படிக் கருதினார்களென்பதில்லை. படித்துப் பட்டம் பெற்ற ஒரு பத்திரிகைக்காரரே தன்னிடம் இப்படிச் சொன்னதாக ஒரு மாணவர் கூறினர்.

நாயுடு அவர்களை நேரே சந்தித்துப் பழகவும் அவரைப்பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தவர்களுக்கு 'அதிர்ஷ்டம்' என்பதில் நம்பிக்கை போய்விடும். அறிவிலும் மனித உழைப்பிலும் அளவற்ற நம்பிக்கை ஏற்படும். மேல் நாடுகளுக்கெல்லாம் சென்று அவர் கற்றுவந்த வித்தை கோடிக் கணக்கான செல்வத்தைக் காலடியில் சேர்க்கும் விஞ்ஞானக் கலைதான் என்பது விளங்கும்.

நாயுடு அவர்கள் கிட்டத்தட்ட 60 வயதை எட்டிக் கொண்டிருக்கிறார். கோயம்புத்தூரில் 'கோபால் பாக்' என்ற பிரசித்திபெற்ற மாளிகை அவருடைய வாசஸ்தலம்.

நல்ல உயரம், ஒல்லியான ஆனால் உறுதியான தேகக்கட்டு, சற்றுக் கனத்த தலை, உணர்ச்சிகளை ஒருபோதும் வெளிக்காட்டாத எச்சரிக்கைத் தன்மையுடன் சதா முறுவல் பூத்த வதனம், பற்றவைத்த சிகரெட் புகைந்துகொண்டிருக்கும் கரம், மெல்லிய வெள்ளுடையில் மூலைகச்சம், கச்சிதமான ஷர்ட், அதன் மேலே சாதாரணத் துண்டு, எப்பொழுதும் ஏதாவது மறைகளையோ, பைல்களையோ முறுக்கிக் கொண்டிருக்கும் சுறு சுறுப்பு—இத்தனை அடையாளங்கள் சொல்லலாம்.

விஞ்ஞான வசதிகள் நிறைந்து சுகாதார நாகரீகச் சிறப்புடன் விளங்கும் அந்த வாசஸ்தலம், தட்டு முட்டுச் சாமான்கள் ஆகியவை அமெரிக்கரே அயர்ந்து போகத்தக்கவை. ஆங்கிலம் அவர் பள்ளியில் படிக்கதில்லை. சொற்பெருக்குகள், கடிதங்கள், சம்பாஷணைகள் பெரும்பாலும் லலிதமான ஆங்கிலத்தில்தான். அத்தனையும் அனுபவத்தாலும் வெளிநாடுகளில் அலைந்து திரிந்த அவசியத்தாலும் பெற்றதிறமை. நூற்றுக் கணக்கான கடிதங்கள் வெளி நாடுகளிலிருந்து வந்து விடை பெற்ற வண்ணம் இருப்பன.

(தொடரும்)

"விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்



தேயிலை பானமருந்தி சம்பாஷிக்க...சம்பாஷணை ரஸமானதாக விருக்கலாம், ஆனால் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலை பானத்தை ஈரமான குளிர்ந்த பாண்டத்தில் தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க ஈரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை."

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்.

1. புதியதாக எடுத்ததும் புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. பேர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷர்யம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் - உபயோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜீ சுபாஷ் ரோட், தபால், பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.



நன்கு தயாரித்த டீ யைப் போன்றது வேறேதுவுமல்ல.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 296



சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 5—12—48

ரெயில்வே தொழிலாளர்

அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் பெடரேஷன் பொது கவுன்சில் நாகபுரியில் ஜெயபிரகாஷ் நாராயணன் தலைமையில் கூடி எல்லா ரெயில்வே யூனியன்களும் வருகிற ஜனவரி இருபதாம் தேதிக்குள் வேலை நிறுத்த விஷயமாக பாலட் எடுத்து கௌன்சிலுக்கு முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி விட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ரெயில்வே தொழிலாளரிடையே எவ்வித எதிரொலி இருக்குமென்ற விஷயம் காத்திருந்து அறிய வேண்டியதே.

வேலை நிறுத்தம் தற்போதைய தேச நிலையில் முன்னேற்றத்துக்கு பலத்த முட்டுக்கட்டையாகத் தான் இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் ஏற்கனவே ரொம்பக் குழம்பிக் கிடக்கும் நிர்வாக வேலையை வேலை நிறுத்தங்கள் இன்னும் அதிகமாகக் குழப்பிவிடத்தான் செய்யும்.

அரசியல் ஞானம் படைத்த முற்போக்காளரிடையே நமது அரசாங்கங்களின் போக்கைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது நியாயமும், வரவேற்கத்தக்கதாகும். ஆனல் நமது அரசாங்கத்திடம் நமக்கு அனுதாபம் இருக்க வேண்டியது குறைந்த பட்ச கடமை என்பதையும் உணரவேண்டும்.

வேலை நிறுத்தத் தீர்மானங்கள் இத்தகைய அனுதாப உணர்ச்சிக்கு முரணானவை. தோழர் ஜெயப்பிரகாஷ் தாம் வற்புறுத்துவதுபோல அரசாங்கத்தின் மேல் பழிவாங்க வேலை நிறுத்தத்தை உபயோகிக்காவிட்டாலும், இந்த வேலை நிறுத்த யோசனையையே புனராலோசனை செய்ய வேண்டுமென எடுத்துக் காட்டுகிறோம்.

அரசாங்கத்துக்கு ஒரு வார்த்தை. தொழிலாளரிடையே தோன்றியிருக்கும் கசப்பைத் தீர்க்க முயற்சிப்பதற்கு பதிலாக, அவர்களிடையே பிளவுகளை உண்டாக்கிப் புதிய இயக்கங்களை மிதக்க விடுவது தவருன வழியாகும். அவர்களது பூரண ஒத்துழைப்பின்றி நாட்டின் நிலை எவ்வகையிலும் சீர்திருந்த முடியாது என்பதையும் உணரவேண்டும்.

கல்வித்துறை

நமது மாகாணத்தில் கல்வித்துறையில் ஒழுங்கீனமும், குழப்பமும் நிலவி வருகிறது என்பதை மிக்க வருத்தத்துடன் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது சரியான திட்டங்களின்றி கல்வித்துறையில் அவசர மாற்றங்கள் ஏற்படுத்தியதன் காரணமாக கலாசாலைகளிலும், பள்ளிகளிலும் கட்டுப்பாடு தளர்வுற்று வருகிறது. ஆசிரியர்களிடையே கொள்கைத் தெளிவின்மையும், பள்ளிநிர்வாகிகளிடையே நியாயமான சந்தேகங்களும் நிலவி வருகின்றன.

செலக்ஷன் பரீட்சைகள் சம்பந்தமாக திருநெல்வேலி, மதுரை, காரைக்குடி, திருச்சி முதலிய இடங்களில் நேர்ந்த வேலைநிறுத்தங்களும், மறியல்களும் இந்தக் குழப்பத்தையும், கட்டுப்பாடின்மையையும் பிரதிபலிக்கின்றன. நல்லவேளையாக இந்த வேலைநிறுத்தங்கள் சுமுகமான முறையில் நின்று ஒழுங்கேற்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

கல்வி விஷயத்தில் ஆழ்ந்த கவனத்துடன் புதிய மாற்றங்கள் நிதானமாகச் செய்யவேண்டும். லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் கூறியிருப்பதுபோல "மெதுவாக விரைய வேண்டும்."

செலக்ஷன் பரீட்சைகளோ, பரீட்சைகளோ வேண்டாமென்று நினைப்பது சரியா, தவரு என்பதை நிர்ணயிக்க இவற்றிற்குப் பதிலாக என்ன மாற்று உடனடியாக ஏற்படப் போகிறது என்பது தெரிய வேண்டும். அதிகச் சிறப்புடைய மாற்று ஒன்றில்லாமல் "இது வேண்டாம், அது வேண்டாம்" என்று கூறிவிடுவது ஒழுங்கீனத்தையும், "துக்ளக்" மனப்பான்மையையும் தான் காட்டிக் கொடுக்கும்.

உணவு நிலை

சென்னை மாகாணத்தின் உணவுநிலை பற்றியும், அரசாங்கத்தின் கொள்கைபற்றியும் தினசரி அறிக்கைகள் வெளிவந்தவண்ணமிருப்பினும் பொது மக்களுக்குத் தெளிவாக ஒன்றும் புலனாக முடியவில்லை.

ஒரு சமயம் அரசாங்கம் அதீதமான நம்பிக்கை யிருப்பதாகத் தெரிவிக்கிறது. மறுசமயம் நிலைமை மோசமாகத்தான் இருப்பதாக பயம் தெரிவிக்கிறது. உணவு நிலையை சமாளிப்பதில் அரசாங்கத்துக்குள்ள சங்கடங்களை எல்லோரும் உணர்ந்திருந்த போதிலும், இத்தகைய குழப்பங்கள் அதன் பூரண ஒத்துழைப்புக்கு பங்கம் விளைத்து விடுமென அஞ்சுகிறோம். மேலும் உணவுக் கொள்கையில் உள்ள குறைபாடுகள் முழுவதன் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டியிருக்குமாதலால் அது சர்வ ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

உணவு நிலையை சமாளிக்க ஒரு சிலரது உணர்ச்சிகளை கவனிக்காமல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பு ஒருபுறமும், பலனளிக்க முடியாத தொந்தரவுகளைப் பொதுமக்கள் மீது சுமத்தாமல் அக்கரையுடன் நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பு மறுபுறமும் இருப்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

சிறு குறிப்புகள்

வாழ்க முதலியார்

சென்ற நவம்பர் இருபத்தொன்பதாம் தேதியன்று சென்னை சர்வ கலாசாலையின் உப அத்யக்ஷகர் ஆற்காடு லக்ஷ்மணசாமி முதலியாரவர்களது 61-வது பிறந்ததின விழா சென்னையில் ஸர் சி. பி. ராமசாமி அவர்களது தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதலியாரின் அரிய சேவையைப் பாராட்டும் முறையில் அவருக்கு ஒரு சிறப்புப் புத்தகம் வழங்கப்பட்டது. இந்த இனிய நூலில் சர்வதேசப் பிரசித்தி பெற்ற பல அறிஞர்கள் முதலியாரைப் பாராட்டி எழுதியிருக்கிருர்கள்.

சென்னை சர்வகலாசாலை கல்கத்தாவுக் கடுத்தபடி இந்தியாவில் மிகச்சிறந்த சர்வகலாசாலையாகப் பொலிவுறும் பாக்கியம் பெற்றிருப்பதில் முதலியாரவர்களது பங்கும் நிறைய உண்டு. ஆங்கிலப் பேராசிரியரும், இலக்கிய கலா விமரிசகருமான மாத்யூ ஆர்னல்டு அவர்களைப்போலவும், இன்று மத்திய அரசாங்கத்தில் மந்திரியாயிருக்கும் முகர்ஜியின் தந்தை போலும் லக்ஷ்மணசாமியவர்கள் ஆற்றலும், நிதானமும் பேரறிவும் படைத்தவர். கல்வித்துறையின் புனிதத் தன்மையை உணர்ந்து அதைப் பாதுகாத்துப் பெருமையுடன் தொண்டாற்றியிருப்பவர். அன்னாரது ஆற்றலுக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம்.

வெட்கம், வெட்கம்!

பெருமைப்படும்படியான இந்த சம்பவம் நடந்த அதே இருபத்தொன்பதாம் தேதியன்று காலையில் வெட்கப்படும்படியான ஒரு சம்பவம் டில்லியில் நடந்தது. வேறெங்குமில்லை, சுதந்திர இந்தியாவின் வருங் காலத்தை நிர்ணயிப்பதற்காக ஏராளமான செலவில் இயங்கி வரும் அரசியல் நிர்ணயசபையில் தான்!

தலைபோகிற அரசியல் சட்ட நுணுக்கங்களை ஆராய்வதற்காக அன்று கூடிய சபையில் 'கோரம்' அதாவது கூட்டம் நடப்பதற்குத் தேவையான குறைந்த பட்ச அங்கத்தினர்கள், இல்லை.

அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்களுக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் ஜனங்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதா, புத்திமதி கற்பிப்பதா என்று தெரியவில்லை! ரொம்ப சங்கடமாகவும், வெட்கமாகவும் இருக்கிறது.

"காலப் போல்"

'காலப்' என்றவுடன் நேயர்களுக்குக் குதிரையும், அதன் வர்க்கத்தைச் சேர்ந்த மற்றொரு ஜந்துவும் ஞாபகத்துக்கு வரும். ஆனல் "காலப் போலு"க்கும் இவற்றிற்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. எந்த விஷயம் பற்றியும் பொதுஜனக் கருத்து எப்படியிருக்கிறது என்பதை அறிய காலப் என்ற அமெரிக்கர் சமைத்த வாக்கெடுப்புமுறைக்கு 'காலப் போல்' என்று பெயர். 'காலப் போல்' அரிய சாதனமாயினும், அதன் மூலம் நிச்சயம் ஒன்றும் ஏற்பட முடியாது என்பதை சமீபத்தில் நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நிரூபித்துள்ளது.

இதுமாதிரி 'காலப் போல்' ஒன்றை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி எடுக்கப் போவதாக வெளியான செய்திகளை மறுத்து அதிகார பூர்வமான அறிக்கையொன்று வெளிவந்துள்ளது. த. நா. கா. க. சில விஷயங்கள் பற்றிய பொதுஜனக் கருத்தை அறிய ஆவலுற்றிருக்கிற தெனினும் "காலப்" செய்யப் போவதில்லை யென்று இவ்வறிக்கையில் அறிவித்துள்ளது.

ஒரு வார்த்தை

இந்த வார இதழிலிருந்து 'சிவாஜி' தன் வாழ்வில் பதினன்காம் ஆண்டுக்குள் பிரவேசிக்கிறுன். காலவேகத்துடன் நடைபோடத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளும் முறையில் பல புதிய அம்சங்களையும், புதிய அமைப்பையும் மேற்கொண்டு பவனி வர ஆரம்பித்திருக்கிறுன். நேயர்களது சலியாத ஆதாரவையும், அன்பையும் ஏற்று வணங்கி மேன்மேலும் தன் கலை வளத்தைப் பெருக்கித் தன்னைச் சிறப்புறச் செய்து கொள்வதாக வாக்குறுதி கூறுகிறுன்.

இந்த இதழில் சத்ரபதி சிவாஜியின் சரித்திரம் அழகிய கதை யுருவில் வெளிவர ஆரம்பத்திருக்கிறது. கோவையில் வதியும் விஞ்ஞானியும், வேதாந்தியும், பேரறிஞருமான ஜி. டி. நாயுடு அவர்கள் பற்றிய கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும். மேலும் பல புதிய அம்சங்கள் விரைவில் சேர்க்கப்படும்.

—ஆசிரியர்.

கோர்ட்டு விளம்பரங்கள்

அரியலூர் டி. மு. கோர்ட்டில்
O. S. No. 307/1948.

வீராசாமி செட்டியார்—வாதி
ராஜகோபால் நாயுடு—பிரதிவாதி

ஷை நம்பர் வாதி பிரதிவாதி பேரில் புரோ நோட்டுபடி தொகை கிடைக்க தாவாசெய்து ஷை நம்பர் பிரதிவாதி சம்மனை ஒட்டி சார்வு செய்துகொள்ள உத்திரவாகி ஷை நம்பர் 7—12—48 தேதி ஈரங்கி வைத்திருக்கிற விபரம் இதன்மூலம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அரியலூர் 30-11-48 } V. சாமிநாதய்யர், வாதி பிளீடர்

திருச்சி டி. மு. கோர்ட்டு
O. S. No. 463/48

வாலாம்பாள் அம்மாள் —வாதி
T. G. நாகோஜிராவ்—பிரதிவாதி

ஷை வாதிகொடுத்த நோட்டீஸ் பிரதிவாதி பேரில் புரோநோட்டுப்படி தொகை ரூ. 1031—2—6 கிடைக்க வாதி ஷை நெம்பரில் தாவா தொடர்ந்து 10—12—48 ஈரங்கி போடப்பட்டிருக்கிறது பிரதிவாதி ஷை தேதியில் காலை 10 மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகாவிடில் ஷை நெம்பர் ஒரு தலை பக்ஷமாக விசாரிக்கப்படும் என்பதை அறியவும்.

திருச்சி 2-12-48 } S. V. கணேசய்யர், வக்கீல்.

திருச்சி டி. மு. கோர்ட்டு
O. S. No. 548/47

தி. தா. தென்னூர் பாங்கு லிமிடெட் by செக்ரடரி T. C. வேலுசாமி பிள்ளை —வாதி

தி. கோ. சின்ன செட்டித்தெருவு சர்வே நெம்பர் 1427, டோர் நெம்பர் 36 உள்ள வீட்டில் இருக்கும் P. A. K. நரசிம்மலு செட்டியார் சம்சாரம் காவேரி அம்மாள் —1-ம் பிரதிவாதி

ஷை 1-ம் பிரதிவாதி என்பவருக்கு ஷை பிரதிவாதிக்குச்சொந்தமான ஜப்தி செய்யப்பட்ட தளவங்களை ஏலம் போடவேணுமாய் மனுக்கொடுத்து அது இஸ்தியார் நிர்ணயிப்பதற்காக 17—12—48 வாய்தா போடப்பட்டிருக்கிறது.

T. P. Vedachalam,
வாதி வக்கீல்.

அரியலூர் டி. மு. கோர்ட்டு
O. S. No. 286/48

உடையார்பாளையம் தாலூகா மீன்சுருட்டியிலிக்கும் சங்கர முதலியார் குமாரர் ரத்தின முதலியார் —வாதி

ஷை தாலூகா பள்ளிகொண்ட பெருமாள்கோவில் கிராமத்திலிருக்கும் ரத்தினமுதலியார் குமாரர் கலியபெருமாள் முதலியார் —பிரதிவாதி

மேலேகண்ட பிரதிவாதியால் வோரூரு கோவிந்தசாமி முதலியாருக்கு 25-2-48-ல் ரூ. 325 க்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிரமிசரி நோட்டை வாதி மேடோவர் வாங்கி இந்த தாவா செய்திருக்கிறார். விசாரணை 6—12—48-ல் வைத்திருக்கிறது.

அரியலூர் 29-11-48 } R. Ramaswami, Advocate.

சென்னைக்குத் திரும்பி வந்து விட்டோம். ஒரு வாரத்திற்கு முன்பு கண்ட அதே சென்னை இப்போது என் கண்களுக்கு முன் மிகவும் சுருங்கிப் போய் இருந்தது. இடையில் எழுந்து மறைந்த ஒருவாரத்து நிகழ்ச்சிகள் உள்ளத்தில் அனுபவக் கடலாக விரிந்து நிறைந்து கொண்டிருந்ததல்லவா ?

மிக மிகச் சிறிய கால எல்லை தான், என்றாலும் மண்ணைவிட்டு உயர எழுந்து வானைத்தொட விழைந்த மனித ஏக்கம் சித்தி பெற்றுவிட்ட பெருமிதத்தில் நினைவுத் திண்ணையில் பெருமிதத்துடன் சாய்ந்து அமர்ந்து ஒரு வாரத்திற்கு முன்பு கண்ட சென்னை மாநகரத்தையும் இப்போது கண்முன்னே சிற்றூராக அது மாறிவிட்ட விந்தையையும் எண்ணிப் பார்த்து அசைபோட ஆரம்பித்தது.

பட்டிக் காட்டிலிருந்து அருகிலிருக்கும் பட்டணம் பார்த்து வந்தவனின் முதல் அனுபவம் போன்ற செருக்கு. இரவு திருச்சி எக்ஸ்பிரஸ்ஸில் இரவெல்லாம் எட்டு மணிநேரம் ஊர்ந்து செல்ல வேண்டிய அடுத்த காரியத்தை நினைத்ததும் கொஞ்சம் நாணம் கலந்த தோல்வி உணர்ச்சியில் உள்ளம் புழுக்கத்தால் வியர்க்க ஆரம்பித்தது திரும்பி மண்ணுக்கு வந்து விட்ட உண்மை உணர்வு தலை தூக்கிவிட்டது அதை மறைக்கவோ மறக்கவோ மனம் வழி தெரியாமல் திகைத்தது.

“ஓ, கடைசியில் நாம் மண்ணில் தான் நடமாடித் தொலைய வேண்டும். 800 மைல் மூன்றரை மணி நேரத்தில் பறந்து சென்ற வெற்றி எங்கே? ஊளையிட்டு இரவெல்லாம் ஊர்ந்து தொலையும் இரயில்வண்டி எங்கே? ஊருக்குப் போனபிறகு மாத்திரம் என்ன வாழ்ந்தது? அன்றாடம் ஒருமைல் நடந்து காரியாலயத்திற்குப் போய்த்தொலைய வேண்டும். மனிதனுக்கு இறக்கையில்லாதது ஒரு தோல்விதான்.”

பௌதீக உண்மைக்கு மனம் நடுங்கினாலும்கூட இதயம் தன் நிலையிலிருந்து பிறழவில்லை. கிடைதத அனுபவத்தை நிரந்தரமாக்கிவிட்டுத் தான் ஒரு சுற்று பருத்துவிட்ட ஆனந்தத்தில் உணர்வெழுந்து நினைவு அலைகளை இழையாக்கிக் கவிதை புனைய ஆரம்பித்துவிட்டது.

இதயத்திற்கே இப்போது இரு பெரும் சிறகுகள் முளைத்திருந்தன. மானிட ஏக்கம் மண்ணைவிட்டு வானை நோக்கித் தாவி நிற்கும் துடிப்பும், வானில் வட்டமிட்டு, எட்டுந் திசையெல்லாம் கைநீட்டித் தொட்டுப் பார்த்துவிட முனையும் ஆர்வமும் பறந்து பறந்து மேலே வான் முகட்டைத் தொட்டு அப்பால் எட்டிப்பார்க்கும் வேகமும், சிருஷ்டி அற்புதத்தை எண்ணி எண்ணி இழைந்த உணர்ச்சிகள் வான் விரிவில் வானம்பாடியாக நின்று பாடிய விந்தையும் திரும்பி மண்ணுக்கு வந்தும் கலையாத அழகுக் கனவாக, நனவு அழுத்தத்துடன் இதயச் சிறகுகளின் விரிநரம்புகளாக முறுக்கேறி நின்றது. மண்ணிலும் வான் வியப்பு குறைந்து விட்டதாக இதயம் காணவில்லை. விண்விரிவே மண்ணிலும் நிறைந்திருந்தது. உணர்ச்சி உருக்கி வார்த்த சொற்களை வாய்விட்டுப் பாட ஆரம்பித்தேன்.

(அடுத்த பக்கம் பார்க்க.)

எங்கும் கிடைக்கும்
மோட்டார் பிராண்ட் — நீலகிரித் தைலம்

தயாரிப்போர் :—
ராஜம் & கோ
14. டபுள் தெரு,
சோழவந்தான் S. I. Ry

திருச்சி ஜில்லா போர்டு விளம்பரம்

1949-50ம் வருஷத்திய சந்தை, பரிசல்துறை குத்தகை ஏலம் கீழே கண்டவாறு நடைபெறும். ஷை குத்தகை ஏலங்களின் நிபந்தனைகளை திருச்சி ஜில்லா 1948-ம் வருஷ நவம்பர்மாத கெஜட்டிலும் ஜில்லாபோர்டு ஆபீஸிலும் பார்த்துக் கொள்ளவும்.

தாலூக்கா	சந்தை ஏல தேதி	பரிசல்துறை ஏல தேதி	ஏலம் நடக்கும் இடம்
திருச்சிராப்பள்ளி	23—12—48	23—12—48	திருச்சி
லால்குடி	24—12—48	24—12—48	திருச்சி
கரூர்	27—12—48	28—12—48	கரூர்
குளித்தலை	29—12—48	30—12—48	குளித்தலை
முசிரி	5—1—49	—	முசிரி
பெரம்பலூர்	6—1—49	—	பெரம்பலூர்
உடையார்பாளையம்	7—1—49	7—1—49	அரியலூர்

ஜில்லாபோர்டு ஆபீஸ்,
திருச்சிராப்பள்ளி,
தேதி 1—12—48

B. Ranganatham Naidu.
For Special Officer.

முகப்பில்

நாவலாசிரியர் திரு. ஏ. ஷண்முகம் நமக்கும் வாசகர்களுக்கும் "பம்பாய்க் காட்சிகளும் விமான யாத்திரையும்" கிடைக்கக் காரணமாயிருந்த முதல்வர்.

முதியோர் கல்வி

பிரிட்டனிலுள்ள கசாப்புக் காரர்கள், ரொட்டித் தொழிலாளர்கள், ஜூனியர் காரியாலய சிப்பந்திகள் முதலியவர்கள் முழு நேர கலாசாலைப் போதனைகளில்—25 வயதிற்கு மேற்பட்டிருந்த போதிலும்—கலந்துகொண்டு பட்டம் பெறுவதற்காக மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

சாதாரண ஹானர்ஸ் பட்டங்கள் பெறுவதற்கான இப்போதனைகள் கல்வி மந்திரியாலயத்தால் அளிக்கப்படுகின்றன. வயது வந்த மாணவர்களுக்கான அரசாங்க உபகாரக்கல்வியென இவை அழைக்கப்படுகின்றன.

இப்போதனைகளில்வேதாந்தம், பொருளாதாரம், போன்ற பல்வேறு நூல்களும் அடங்கியுள்ளன. இதற்கென தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள முதல் 20 மாணவர்களில் ஏழு நபர்கள்தான் 16 வயதிற்கு மேல் பள்ளியில் பயின்றிருக்கின்றனர். 10 நபர்கள் தங்களுடைய 14 வயதிலேயே பள்ளியிலிருந்து விலகியவர்கள்.

பம்பாய் பிரயாணம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

மண் ஒட்டு
நீங்கி மேலே
வானெட்டப்
பறந்து சென்றேன்
கண் எட்டும்
தூரமெல்லாம்
கையெட்டித்
தொடுவான் கண்டேன்
விண் எட்ட
விழையும் உள்ள
விரை வொட்ட
உணர்ச்சிக் கொப்பில்
பண் ஒட்ட
வட்ட மிட்டுப்
பாரொட்டித்
திரும்பி வந்தேன்
புண பட்ட
நெஞ்சில் ஏக்கப்
புரை பட்ட
நினை வழித்தேன்
பண் பட்ட
மானி டத்தின்
பதம் பெற்ற
உச்சிச் சீர்த்தி
விண் எட்டும்
வியப்பை யெல்லாம்
விரி வுற்ற
சிறகில் தூக்கிக்
கண் கொட்டு
முன்னர் இன்பக்
களை கட்டும்
வாசல் வந்தேன்.

மானிடத்தின் வெற்றி அபாரமானது. அனுபவத்தினைப்பு ஏற ஏற மண்ணிலும் விண்ணின்பம் களை கட்டி நிற்கப் பார்க்கிறது இதயம். இதைவிட வேறு என்ன லாபம் வேண்டும்? (முற்றும்

★

வருந்துகிறோம்

திருச்சி "வர்த்தக ஊழியன்" ஆசிரியரும், திருச்சி ஜில்லா பத்திரிகைக்காரர் தலைவராக சில காலம் இருந்தவருமான திரு. டி. வி. கே. நாயுடு அவர்கள் நோயுற்றிருந்து காலமான சேதி கேட்டு வருந்துகிறோம்.

சிவாஜி வாழ்த்து

—★—

விருத்தம்—அறுசீரடி.

புவனமிசை மக்களெலாம் பலவழியிற் பொருளீட்டி பூதம் போல
கவனமாய் காத்திருந்து நற்பணிக ளியற்றாமல் காலன் வந்தால்
சவமாகிச் செல்லுகின்றா ரிப்பெருமை யாரறியார் தக்கோர் போற்ற
சிவனருளால் மக்கள்பணி தன்பணியாய் தலைசுமந்து திரிகின்றாய் நீ

குடிகளெலா மதிகார வர்க்கமொடு குலவிநின்று குறைகள் நீங்கி
மிடியகற்றி வாழ்வதற்கே பலதுறைகள் வகுத்துரைத்து மேன்மை யாக
படிமீதி லிணையில்லை யெனநாட்டுக் கோருயர்ந்த பதவி நல்க
இடிபோலு மிடித்துரைக்கும் நற்பெயரை சிவாஜியின் றெடுத்தான் கண்
டோம்

பதவிசில பூண்டவர்கள் மக்கள்குறை கவனமாய்ப் பாரா ராகில்
இதமுடனே சிலகாலம் சொலிகேட்டும் அஞ்சாமல் எதிர்த்தும் தாக்கி
உதவிவரும் சொல்வன்மை யிந்நாளில் தமிழ்நாட்டி லுன்பால் பெற்றோம்
நிதவாழ்வில் நெஞ்சஞ்சா நேர்மையுடன் பணிசெய்வாய் நிகர்வார் யாரே

தித்திக்கும் வார்த்தைகளால் கட்டுரைகள் தலைப்பங்கம் தேர்ந்து கோர்த்து
எத்திசைக்கும் பரப்புவாய் கற்றவர்கள் மகிழ்ந்தேத்தி யினிது கொள்வர்
சத்தியமும் உண்மையுமே சாந்தமுட னன்புடனே சார்ந்து நிற்கும்
பத்துடனே மூன்றாண்டி விந்நற் கியாதிதனை பாரிற் கொண்டாய்

எழுத்தாள ரிசையாள ரெனப்பலபேர் திரிகின்றா ரிந்த நாட்டில்
வழுக்கிவிழுந் தெழவறியார் வாக்குமன மொன்றில்லார் வண்ணான்
தூக்கும்
அழுக்கெனலா மவாறிவை யதைநாடோம் தூயதமி ழன்னை பூண்ட
முழுக்கலையை சிவாஜிநண்பன் வாரமொரு முறைமகிழ்வாய் முழக்கு
கின்றான்

இருந்துவரும் பேதமெலாம் கட்சிபல வுருவெடுத்து எதிரே தோன்றும்
விருந்தினர்போ லணைத்தவரை மெய்யுரைத்து வேற்றுமையை விலக்கி
வைத்து
தருந்தமிழா லுறவாடி தமிழ்மக்க ளொருமுகமாய் தழைத்து வாழப்
பெருந்தகுதி செயவல்லோய் சிவாஜியெனும் பெயர்படைத்தோய் பெரி
யோய் வாழ்தி

இந்நிமக் கெதற்காக புகுத்துவதின் பய னென்னவீன்ற தாயார்
தந்தமொழி த்மிழுண்டு வள்ளுவனின் குறளுண்டு தாணி யாள்வோம்
சொந்தமொழி வாழ்க்கைநிலை கலையறிவு மேன்மைதரும் துணையு மாகும்
சிந்தனைக்கு நூல்களுண்டு தெளிவதற்கோ ஆயுளில்லை சிவாஜி செப்பும்

காட்டிலொரு புலவன்விடு தலைக்கனவை யெடுத்துரைத்தான் கனவாயிற்று
எட்டளவே வாழ்க்கையின்ன மொருசிறிதும் பயன்காணோம் எங்கும்
சென்று
பாட்டுரைக்க பலர்படிக்க பாவலனின் நூல்பரவும் பண்பு காணோம்
காட்டுவழி செல்லுகிறோம் பாக்களுக்கு விடுதலையைக் கண்டோ மில்லை

இதன்நிலையை மக்களுக்கும் மாந்தருக்கு மிந்நாளி லிடித்துக் கூறி
மதிவிளக்க புவிமீது பாரதியின் பாமுழங்க வைக்க வேண்டி
புதுகிளர்ச்சி யெழுப்பிவரும் சிவாஜிசெயு மரும்பணியை பொதுவாய்
கண்டு
பதின்மூன்று வயதுடையாய் பல்லாண்டு வாழ்கவென ப்பாடு கின்றார்

புலவர்பிரான் பாக்களெலாம் தேயத்தின் சொத்தாகும் பொருளை சேர்க்க
சிலவர்செய்யும் சூழ்ச்சியிக்கு துரோகமென எல்லவர்க்கும் தெளிவாய்
காட்டி
பலர்படிக்க பாக்களுக்கு விடுதலையை யெவ்விதத்தும் பறித்து வாங்கி
உலகருக்கே யளிபணியைத் தலைக்கொண்டாய் சிவாஜியுந்த னுறுதி
யென்னே

சொல்லிலே மயங்கிடுவர் சொற்பொழிவில் கலங்கிடுவர் தூய வுள்ளம்
நல்லவர்க ளுறவுகொண்டு மதுரமுடன் தமிழ்செய்யுள் நவில வல்லான்
எல்லவரை யிசைநயத்தால் வசப்படுத்து மாற்றல்மிக வெளிதாய் கொண்ட
வல்லவன்காண் தமிழ்நாட்டு திலகமெனச் சிரபுரத்தில் வாழ்கின் றான்காண்

நேசமுறும் நமதன்பு சிவாஜியிட மெந்நாளும் நிலைத்து நிற்க
பேசரிய தேன்மொழியால் தமிழ்மணத்தை தான்நுகர்ந்தும் பிறர்க்கும்
நல்கும்
ஆசிரிய னவன்பெயரே யெல்லவர்க்கும் வியப்பளிக்கும் அறைவோம்
கேண்மோ
தேசமிந்த வுலகெனினும் பெயர்சுமந்தான் திருலோக சீதா ராமன்

எண்சீரடி.

அருந்தமிழின் சுவைநமது நாவிற் சொட்ட, ஆசையுட னருந்துகின்றோ
மறிவும் பெற்றோம்
திருந்துபல கற்பனைகள் களிப்பாய் காணும், திறம்கிடைத்தோம் கலை
வளர்க்கும் சிறப்பும் கண்டோம்
பெரும்புலமை போறிவு மலிந்து நிற்கும், பெருமைதனை தமிழ்மக்கள்
பெற்றா ரிந்நாள்
விரிந்தபுவி தனில்நமது சிவாஜி நண்பன், மிக்கபலம் விருத்தியுற்று மேல்
மேல் வாழ்க.

—டி. எஸ். சோமசுந்தரம் பிள்ளை

நோட்டீஸ்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், 1358-ம் பஸலி நம் பெருமாள் திருமொழி திருவாய் மொழித் திருநாளுக்கு பலபட்டரை குத்தகை, பட்டாணிக் கடலை கடை, புஷ்பக்கடை இவைகள் 11-12-48உ சனிக்கிழமை மாலை 3-மணிக்கு ரெங்கவிலாஸ் மண்டபத்தில் ஏலம் போடப்படும். தேவையானவர்கள் டிபாஸிட் கட்டி ஏலம் கேட்கலாம். மற்ற நிபந்தனைகள் தேவஸ்தானம் ஆபீஸில், ஆபீஸ் நேரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்
ஸ்ரீ ரெங்கநாதஸ்வாமி வகையரா தேவஸ்தானம்,
ஸ்ரீரங்கம்

TRADE MARK
குவாலிடி காப்பி
திருச்சி.



<u>திரைப்பட விமர்சனம்:</u> "மூர்த்தி"

முபாரக் பில்ஹணு

தயாரிப்பு—முபாரக்

டைரக்ஷன்—பி. என். ராவ்

நடிகர்கள்—கே. ஆர் ராமசாமி ஏ. ஆர். சகுந்தலா, புளிமூட்டை முதலியோர்

சில நாட்களுக்கு முன்பு டி. கே. எஸ். சகோதரர்களின் 'பில்ஹணன்' படம் திரையிடப்பட்ட போது ஒரு அன்பர் மனப்பூர்வமாக "நாடகத்தில் அற்புதமாக நடித்துக் காட்டினர். திரையில் உருவானதும் அதன் சுவை குன்றிவிட்டது. நாடக பாணியே தலைதூக்கி நிற்கிறது" என்று குறைப்பட்டுக் கொண்டார். அவர் சொன்ன குற்றச் சாட்டைக் கேட்டதனாலோ என்னவோ எனக்கும் கூட படத்தில் ஏதோ குற்றமிருப்பதாக ஒரு உள்ளுணர்வு உண்டாகிவிட்டது.

ஆனால் அந்த உள்ளுணர்வு நேற்று முபாரக்கின் பில்ஹணு என்ற பெயரைச் சுமந்துகொண்டிருக்கும் கவியின் காதலைக் கண்டதும் ஓடியே போய்விட்டது. டி. கே எஸ். சகோதார்களின் பில்ஹணன் 100 மடங்கு அற்புதமானது, கலைக் களஞ்சியம், மகோன்னத சிருஷ்டி என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த அதே அன்பரிடம் வாய்விட்டு ஆத்திரம் தீரச் சொன்ன பிறகுதான் மனம் நிம்மதியடைந்தது.

வருஷக்கணக்காக திரை மறைவில் ஆமை வேகத்தில் வளர்ந்து கொண்டிருந்த 'பில்ஹணு' ஒரு தினுசாக போன மாதம் ஊர் சுற்றக் கிளம்பினுள். முதல் குறை கதைக்கு பில்ஹணு என்ற பெயரே ஏற்றதல்ல. அதனுல்தான் அவர்களே பயந்துகொண்டு கதையிலும் ஏகக் குளறுபடி செய்து கெடுத்திருக்கிறார்கள்.

நாடகம் நடத்திப் பிரக்யாதியடைத்த டி. கே. எஸ். சகோதரர்களும் 'பில்ஹண' படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள் என்ற செய்திதான் 'முபாரக்' காரர்களை தினை அடித்து பில்ஹணுவை இவ்வளவு மட்டமாக்கிவிட்டது போலும்.

கதை: 'பில்ஹணு' காஷ்மீர்வாசி கவி. கலைஞன். ஏகாந்தமான இடத்தில் ஆச்ரமம் நடத்துகிறார். ஆச்ரமவாசி பில்ஹணுவின் சிஷ்யை வனஜா பில்ஹணனிடம் மாருத காதல் கொண்டு தவிக்கிறாள். தன்னை மணக்கும்படி கெஞ்சிக் கூத்தாடுகிறாள். ஆனால் பில்ஹணு மறுத்து விடுகிறார். (காரணம் அவள் அழகாயில்லை என்பதற்காகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிடில் குரு சிஷ்யையை மணப்பது நியாயமல்ல என உபதேசம் செய்பவர் பாஞ்சால தேசத்து ராஜகுமாரியை மட்டும் அவளும் சிஷ்யையாக இருந்தும் மணக்கச் சம்மதிப்பானேன்?) ஆசரமத்தை விட்டு ஓடிவிடுகிறார். பாஞ்சால தேசத்து அரசகுமாரி சசிகலாவிற்கு வித்தை கற்பிக்க ஆள் சரியானபடி கிடைக்கவில்லை. இது விஷயமாக ஆஸ்தான வித்வான்களுடன் மனஸ்தாபம் ஏற்படுகிறது பில்ஹணனைப் பற்றி மந்திரி குறிப்பிட்டு அவனைத் தேட ஆள னுப்பப்படுகிறது. பொறாமைகொண்ட வித்வான்களின் ஆர்ப்பாட்டம். இதனிடையே வன 'ஜாவால் ஆற்றில் எறியப்பட்ட பில்ஹணரின் படம் சசிகலாவிடம் ஆற்றில் மிதந்தபடி வந்தடைகிறது. காதல் ஏற்படுகிறது. ஆச்ரமத்தை விட்டு வெளியேறிய பில்ஹணர் பாஞ்சால நாடடைந்து சசிகலாவிற்குக் குருவாகவும் ஆனார். திரை விஷயமும் வருகிறது. திரை கிழியாதபடி (துணிப்பஞ்சம் பாருங்கள்) இரவில் காதலர் சந்தித்து களித்துக் கலக்க ஆரம்பிக்கின்றனர். பொறாமை கொண்ட பண்டிதர்கள் குடி மக்களிடம் பிரசாரம் செய்து கிளப்பிவிட மக்களே பில்ஹணனைப் பழிவாங்கக் கிளர்ச்சி செய்கிறார்கள். சோலைக்களம். அரசகுமாரியின் அலறல்—இத்யாதி வழக்கப்படி.

கதையில் விசேஷ அம்சங்கள் (!): பில்ஹணர் ஆச்ரமத்தில் அரசகுமார் போல வாழ்க்கை நடத்துவது. அவருடைய சிஷ்ய கோடிகள் எல்லோரும் பெண்களாகவே இருப்பது. அதிலும் அதிசயம் ஒரு சிஷ்யை அவர் மேல் மாருத காதல்கொண்டு தத்தளித்துத் தவித்து காஷ்மீரிலிருந்து பாஞ்சாலத்துக்கு ஓடிவருவது. பில்ஹணனைப் பழிவாங்க குடிகளே திரண்டு எழுவது. இவைபோன்றவை தனிச்சிறப்புடையன.

தோடா, துப்பட்டா, கையணி காதணி குண்டலம், ரத்னமாலைகள் சகிதம் பில்ஹணர் நடத்தும் ஆச்ரம வாசத்தைப்பார்க்கும்போது "இது காஷ்மீர்தேசத்து வழக்கம்" என்று சமாதானப் படுத்திக்கொள்ளவேண்டி இருக்கிறது.

ஆச்ரமப் பெண்கள் க்யூவரிசையில் இடுப்பில் தண்ணீர்ச் சட்டியுடன் கையைமட்டும் நெளித்து நெளித்துக் கொண்டுவரும் (அதற்கு நாட்டியம் என்று பெயர்) கலை நடையைப்பார்க்க கண் கோடிதான்தேவை. இதேபோல அங்குள்ள ஆச்ரமப் பெண்கள் அவ்வளவுபேரும் தங்கள் தினசரி வாழ்க்கையை (!) நாட்டியத்தின்மூலமே நடத்துவது அற்புதம். அதைவிட அற்புதம் ஆஸ்ரமத்தில் ஆண் வாடையே இல்லாதது.

டி. கே. எஸ். சகோதரர்களின் பில்ஹணனில் 'யாமினியை' கலை ஆர்வமுள்ள ஒரு சிறுமியாக, சிருஷ்டித்திருந்தார்கள். நமக்கும் யாமினி சகல கலைகளையும் கற்க ஆவலுள்ள ஒரு சிறுபெண்போலக்காட்சி யளித்தாள். ஆனால் பில்ஹணுவில் வரும் சசிகலா அதற்குநேர்மாருகத்தோற்ற மளிக்கிறாள். முதல் காட்சியிலேயே "அல்லிராணியாக" உருவான சசிகலா பின்னால் வரவர பருவமடைந்த ஒருதாசிபோல,நாட்டியக்காரிபோலத் தான் நமக்குக் காட்சி அளிக்கிறாள். கலைகளைக்கற்கும் ஆர்வமுள்ள பெண்ணாகத் தோற்றமளிக்கவில்லை. பில்ஹணுவிடம் முதல் நாள் பாடம் அவளே சொல்கிறாள். என்ன தெரியுமா? சகுந்தலையை துஷ்யந்தன் கட்டித்தழுவி மூத்தமிட்டதின் தத்துவத்தைப்பற்றி விளக்கமாகக் கேட்கிறாள். எப்படி!

முதல் முதலில் சசிகலாவும் கவியும் கோயிலில் சந்திக்கின்றனர். ஆனால் அந்தச் சந்திப்பில் தன் திறமை முழுதும் உபயோகப்படுத்திவிட்டார் டைரக்டர் சார். காமம் மீறிய ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை அப்படியே தத்ரூபமாக்கியிருக்கிறார்.

கன்னிமாட வாழ்க்கை நடத்தும் சசிகலாவின் கட்டிடத்துக்குள்ளேயே பில்ஹணனுக்கும் வாசஸ்தலம். பில்ஹணு இரவில் சந்திர நிந்தனை செய்துபாட அதைதன்மாடியிலிருந்து பார்த்து (கேட்டு) தட தடவென்று கீழே இறங்கிவந்து கவியோடு கலக்கும் காட்சி எவ்வளவு அசம்பாவிதம்.

டி.கே.எஸ். பில்ஹணனில் யாமினியின் "கலைவாக்கு வாதமும்" திரை கிழிதலும் எவ்வளவு தத்ரூபம்.

கவிகள் மகாநாட்டில் ஆஸ்தான கவியும், விதூஷகக்கவியும் மட்டும் காட்சியளிப்பதைக்கண்டதும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஒருவேளை நாற்காலிப்பஞ்சத்தினால் மற்ற கவிகளுக்கு உட்கார வசதி இல்லைபோலும்.

பல நாள் பாடங்கேட்டுப்பழகிய சசிகலாவும் கவியும் முதல் சந்திப்பில் நான்தான் ராஜகுமாரி, நான்தான் கவி பில்ஹணன் என்று பரிமாறிக் கொள்ள "ஹா நீங்களா" என்று வியப்பது எவ்வளவு மடத்தனம். குரலிலிருந்துகூட அடையாளம் அறிந்துகொள்ள முடியாத அவர் கவியாகவும் இவள் கலை ஆர்வமுள்ளவளாகவும் இருந்து என்னபயன்.

பில்ஹணுவிற்கென்று புதுமாதிரியான ஹாஸ்யத்தைப் புகுத்தி இருக்கிறார்கள்! என்ன அற்புதம். என்ன அற்புதம்போங்கள். புளிமூட்டையை உட்காரவைத்து அபிஷேகம் செய்து அவரைச் சுற்றி கும்மியடித்துப் பாடும் அழகு உண்டே! அடடா! எவ்வளவு அபாரமான மூளைகள் இதற்குப் பாடுபட்டதோ அவர்களை நோபில் பரிசுக்குச் சிபாரிசு செய்யலாம். கும்மியடிக்கும் கோலம் இதுவரை தமிழ்படத்துக்குப் பழமையாக இருந்தது அந்தக் குறையையும் தீர்த்துவைத்துவிட்டனர் முபாரக் கார்.

அங்கமுத்துவை உட்காரவைத்து புளிமூட்டை வண்டி இழுக்கும் போது படம் கிளைமாக்ஸின் உச்சியை அடைந்துவிடுகிறது. 'பாஞ்சால தேசத்தில் வண்டியிழுக்க மாடு கிடையாது. வண்டியை மனிதர்களே இழுத்தனர்' என்பதை ஆராய்ச்சிமூலம் தெளிவுபடுத்துகிறார் டைரக்டர். இம்மாதிரி பாத்திரங்களில் புளிமூட்டை இனி நடித்தால் தன் பெயரை இழக்கத்தான் வேண்டிஇருக்கும்.

பாஞ்சால தேசத்தில் பண்டிதர்களின் ஆர்ப்பாட்டம்தான் அதிகமாக இருக்கிறது. அரசாங்க அதிகாரமோ கெடுபிடியோ காணும். குடிமக்களைப் பண்டிதர்கள் கூட்டி கிளர்ச்சி செய்யும்படியான நிலைக்கு இருந்ததென்றால் பிறகு என்ன வேண்டும்.

சொல்லுவதென்றால் இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். ஆரம்பமுதல் கடைசிவரை மூளுன ஒரு படத்தைப் பற்றி அதிகம் எழுதுவானேன்.

நடிப்பு :— யாருக்குமே இந்த சரக்கு இருப்பதாகத் தெரியவில்லை. நாட்டியப் புகழ் சகுந்தலா, கண்களை உருட்டி கையை ஆட்டிப் பேசுவதுதான் நடிப்பு என்று எண்ணி இருந்தால் அது தவறு. ராமசாமியிடம் நாம் பிரமாதமான நடிப்பை எதிர் பார்ப்பது நியாயமல்ல!

நல்ல அம்சங்கள் :- அழகான இயற்கைக் காட்சிகளையும் வெளிப்புறக் காட்சிகளையும் தேடிப்பார்த்து அழகுபடப் பிடித்திருக்கிறார்கள். அதற்குப் பாராட்டத்தான் வேண்டும். ஒலி ஒளிப்பதிவு மட்டம். ஏதோ இரண்டொரு பாட்டு இனிமையாக இருக்கிறது.

மொத்தத்தில் சினிமா உலக அனுபவம் இல்லாத புள்ளிகள் சேர்ந்து ஒரு ஷோக்குக்காக எக்கச்சக்கமாக உருவாக்கிய படம் பில்ஹணு என்ற பெயர்கொண்ட கவியின் காதல். அது வாழ்க!

*

* சுதந்திர இந்தியாவில் தேசீய கைத்தொழிலை ஆதரியுங்கள்! *

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரிகளுக்கு சப்ளை செய்யப்படும்.

*

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பெங்களூர் காஞ்சிவரம் பட்டு சேலைகள் பனாரஸ் ஜரிகை புட்டா, தார்பானு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

டவுன் ஸ்டேஷன்ரோடு, திருச்சி.

Slate Manufacturers & Fancy Piece'goods & Silk cloth Merchants,

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்,
கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப் படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினால் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

டோங்ரேயின்—
பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. திமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd., MADRAS.

மணப் பரீட்சை

டி. ஆர். குருஸ்வாமி

"அந்த மோதிரத்தை எடுத்துப் போட்டுக்கொள்" என்ருள், அம்மா.

"ஏனம்மா! அது இல்லாவிட்டால், பரீக்ஷையில் பாஸ்மார்க் கிடைக்காதா? என்ன?" என்றேன்.

"உன்னோடு பேச முடியாதப்பா, என்னவ்...சட்டையும் ஒன்றும் நல்ல மாதிரியாக இல்லை...என்னவோ உன் இஷ்டம்" என்று சற்று அங்கலாய்ப்புடன் சொல்லி நிறுத்தினள், அம்மா.

"என் சட்டை, வேஷ்டி, இவைகள்தான் பார்க்கப்படவேண்டியவைகள் என்ருல், நல்ல ஸெட்டாக ஒன்றை வாங்கிக்கொண்டு வருகிறேன்; அதையேகொண்டுபோய் காட்டி விட்டால்போகிறது."

"அதுதான் சொன்னேனே, என்னால் உன்னுடன் வாக்குவாதம்செய்ய முடியாது. நீ ரொம்பவும் பேசக் கற்றவன். எனைக்கேட்டால் இப்போதே நீ போய் ஒரு 'ஸெட்' வாங்கி வந்துவிட்டாலும் நல்லது என்றுதான் சொலவேன். இப்படிப் போனல் எப்படியிருக்கிறது....." என்ருள். இதற்குள் மாமியும் அம்மாளுடன் சேர்ந்துகொண்டாள்.

"என்னடா! என்னவோ, இல்லாத கையாண்டியெல்லாம் செய்கிருய். அதது எப்படிப்பெரியவர்கள் சொல்லுகிருர்களோ அப்படித்தான் நடக்கவேண்டும்" என்ருள் மாமி.

"இல்லை, மாமி! இன்றைக்கென்று இல்லாத அலங்காரங்களெல்லாம் செய்து கொண்டுபோனல் எப்போதும் அப்படியே காட்சி யளித்துக் கொண்டிருக்கமுடியுமா? நான் என்னவோ உடை விஷயத்தில் அதிக கவனம் செலுத்துகிறவனல்ல. அப்படியிருக்கையில், மடிப்புகலையாத வெள்ளை உடையும், இரவல் 'ரிஸ்ட் வாச்சு'ம் போட்டுக்கொண்டுபோய் மினுக்குவானேன்? எனது உண்மை அழகுக்குத்தகுந்த 'மார்க்' கிடைக்கட்டும் போதும்." என்று ஒரு குட்டிப்பிரசங்கம் செய்து அவள்வாயைக் கட்டினேன்.

இத்யாதி வைபவங்களுடன் புறப்பட்டுப்போய், ஒருதினுசாக அவர்கள் வீட்டையடைந்தோம். வாசலில் உள்ள ஒரு சிறுபையன் எங்களை எதிர்கொண்டழைத்தான். இது முன்னேற்பாடுபோலிருக்கிறது. அவனது குரல் கேட்டு உள்ளே ஆயத்தம் ஆகிவிட்டது. உள்ளே நுழைந்தோம்,— நுழைந்தேன்! பரீக்ஷை ஹாலுக்குள் பாடம் படிக்காமல் செல்லும் மாணவனின் மன நடுக்கத்துடன்.

எனது நண்பன் ரகுவும், ராமுவும் பின்தொடர்ந்தனர். அவன் (ரகு) எப்போதுமே ஹாஸ்ய ரசத்தில் மூழ்கிக்கொண்டிருப்பவன். சாதாரணமாகப்பேசும்பொழுதே, ஏற்படும் முகபாவங்களையே பார்த்து கேலி செய்வதிலும், 'இப்போது உன்முகத்தைப்படம்பிடிக்கவேண்டும்' என்று சொல்லுவதிலும் பழக்கப்பட்டவன். அத்துடன் அப்போது அவன் ஒரு 'அமெட்ச்யூர் போட்டோகிராபரும்' கூட.

வீட்டிலிருந்துபுறப்படுவதிலிருந்தே என் முகத்தை ஜாடையாகக் கடைக்கணித்துக்கொண்டும், புன்முறுவலித்துக்கொண்டும் வந்தான், எல்லோரும் சொல்லுவார்களே. 'ஆடு திருடிய கள்ளன்' என்று, அத்தகைய முழிப்பிலும், மனோ நிலை நிலையிலும், ஒரு வகையான அசட்டுத்தனத்தை அப்பியமுகபாவத்திலும், ஊர்ந்து செல்லும் என்னை அவன் விட்டுவைப்பானு? ஏதோ மெதுவாக ராமுவிடம் பேசிக்கொண்டேவந்தான் ரகு.

இவ்வளவுக்கும் பின்னல் ஒரு விமரிசனம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். என்ன செய்வது? போய் உட்கார்ந்தோம். ரகு காதோரமாக வந்து "கையில் 'காமிரா' கொண்டு வரவில்லையே" என்ருன். அப்படிச் சொல்லுவான் என்ற எனக்குத் தெரியும். அதற்குப் பதிலாக, நான் "காமிரா கொண்டுவந்திருந்தாலும் உனக்கு 'லைட்'போதாது" என்றேன், மெதுவாகத்தான். உடனே எங்களிடையில் ஒரு நிசப்தச் சிரிப்பு நிகழ்ந்தது.

என்னவோ, சிரித்து விட்டேன். இருந்தாலும் அந்த நேரத்தில் சிரிப்பதற்கு ஒரு பயம், ஒரு வெட்கம், சிரித்தால் 'அசடு' என்றும், முகத்தை 'உம்' மென்று வைத்துக்கொண்டால் 'முசுடு' என்றும் காரெக்டர் ரிபோர்ட் வாசிக்கப்பட்டால் என்ன செய்வது என்று. அதன் பிறகு பரீக்ஷை ஆரம்பமாகியது. கேள்வித்தாளின் வினியோக சமயத்தில் அடித்துக் கொள்ளும் மாணவனின் மனம் போல அடித்துக்கொண்டது என் மனம். வரும் கேள்விகள் கடினமானவையோ? அல்லது சுலபமானதுதானே?

என் மனத்துள்ளேயே கேள்வித்தாள் ஒன்று தயாரானது. அதற்கு பதில் தேடுவதில் முனைந்தேன். அந்த நேரத்தில் என் கண்ணில் பட்டதெல்லாம் நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு எதிரில் மாட்டப்பட்டிருந்த லக்ஷிமி படம் ஒன்றுதான். அந்த நேரத்தில் என் பரீக்ஷைக்காக என் எதிரில் வந்து நமஸ்கரித்து என் உருவத்தையும் அரைக் கண்ணால் பரீக்ஷை செய்துகொண்டு நடந்த ஒரு உண்மை ஸ்ரீ சொரூபத்தை நான் காணவில்லை. ஆனல், நான் அன்று அங்கு போனது அந்த உருவைக் கண்டு, ஆராய்ந்து, தகுதி தேர்ந்து, 'சம்மதம்' அளிக்கத்தான். ஆனல்! அங்கு போன எங்களுக்குள் அந்தப் பெண்ணைப் பார்க்காத கண்கள் என்னுடையதுதான்.

எனக்கு ஏன் பார்க்க முடியவில்லை என்று எனக்கே தெரியவில்லை. எத்தனையோ கதைகளில் அந்தப் பிள்ளையாண்டான்கள் பட்ட அவஸ்தை வர்ணிக்கப்பட்டிருந்தது. அவைகளை படிக்கும்போதெல்லாம் 'நாம் இப்படியெல்லாம் வெட்கப்படக் கூடாது' என்றுதான் திட்டமிட்டேன். ஆனல் சந்தர்ப்பத்தில் நானும் வெட்கப்படத்தான் செய்தேன். அது ஒரு காரணமானலும் மனதிலெழுந்த கேள்விகளுக்குப் பதில் கண்டு பிடிப்பதில் நேரத்தை செலவழித்துவிட்டேன். ஆகவே வீட்டிற்கு வந்த பிறகு நான் தாயாரையும் ரகுவையும் விசாரித்துப் பிறகு பெண்ணின் அழகைப் பற்றி தெரிந்துகொண்டேன்.

அநேகமாக எல்லா மாப்பிள்ளைகளுக்கும் இத்தகைய அவஸ்தை ஏற்பட்டிருக்கும். அப்போதெல்லாம் என் மனத்திலெழுந்த கேள்விகள் எல்லோருடைய மனத்திலும் எழுந்திருக்கலாம். ஆனல் பதில் பலவிதமாகத்தான் இருந்திருக்கும். அந்த நிலையில் என் மனத்தின் கேள்விகள் என்னென்ன?

பெண்பார்ப்பது என்பது எதற்கு?

மணப் பெண் எனபது பெண்ணினின்று பிரிந்த ஒரு வகையா? வீதியில் தலை நிமிர்ந்து மேலாக்கு காற்றை அலசும்படி செல்லும் அதே பெண் மணப் பெண்ணுகப் பரிணமம் ஆகையில், இழுத்து மூடியபடி, தலை குனிந்து வருவது ஏன்? வந்திருப்பவன் தன்னைப் பார்க்கவே வந்திருப்பதால் அவன் தன் முகத்தைப் பார்த்துவிடக் கூடாது! என்ற எண்ணமா? அப்படியிருக்கையில் அவள் மட்டும் நம்மைப் பார்க்கலாமா? (அதையும் நான் கண்டுபிடித்தது எப்படி என்கிறீர்களா? பாவமில்லை.)

பெண்ணைப் பார்க்கவென்று போய் 'பாடத் தெரியுமா? சமையல் செய்யத் தெரியுமா? எங்கே ஒரு மோர்க்குழம்பு செய்து காட்டு' என்று கேட்பதில்லையே? அது ஏன்? செட்டாகச் செலவு செய்யத் தெரியுமா என்று ஏன் ஆராய்வதில்லை? பாடத் தெரிந்துவிட்டால் குடும்பத்தை நிர்வகித்து விடலாம் என்று ஏதாவது திட்டம் உண்டா?

சாதாரண காலங்களில் கணீரென்று பேசி வம்பளக்கும் பெண், சதா சர்வகாலமும் சினிமாவின் 'டுவட்' பாடல்களை முணுமுணுக்கும் பெண்களுக்கு மாப்பிள்ளையின எதிரில் தொண்டை அடைத்துக் கொள்வதோ நடுங்குவதோ ஏன்? உணர்வின் மிகுதியாலா? அல்லது பயமா? பெண்கள் 'மேக்கப்' செய்து கொண்டிருக்க வேண்டுமா? சாதாரண உடையில் இருக்கவேண்டுமா?

அந்த இடத்திலேயே மாப்பிள்ளையைச் சூழ்ந்து கொண்டு "சம்மதம்" கொடுக்கச் சொல்லி துன்புறுத்துவது தகுமா? அப்போதே பையன் 'சம்மதமில்லை' என்றோ 'பெண் பிடிக்கவில்லை' என்றோ சொல்லிவிட முடியுமா? அப்படிச் சொன்னல் விடுவார்களா?

மாப்பிள்ளையை 'சம்மதம்' கேட்கிருர்களே ஒழிய மணப் பெண்ணை ஏன் கேட்பதில்லை? அப்படிக் கேட்டாலும் பதில் ஏன் மாப்பிள்ளை காதுவரையில் கேட்பதில்லை!

'மாப்பிள்ளைக்குச் சம்மதமில்லை' என்ற ஒரு போர்வை பிள்ளை வீட்டாருக்கு இருப்பதுபோலப் பெண் வீட்டாரும் 'பெண்ணுக்குப் பிடித்தமில்லை' என்றுவிட்டால் நமது கதி? 'பையன் அழகாக இல்லையாம்' எனப் பெண் சொல்லிவிட்டால், நாம் எப்படி வெளியில் போவது?

எல்லோருக்கும் முன்னே நாம் புறப்பட்டு விடலாமா? அல்லது எல்லோரையும் பின்பற்றலாமா? அப்போதாவது ஒருமுறை பார்க்க முடியுமோ என்னவோ?' போய்வருகிறேன்' என்று சொல்லிக்கொள்வது அலௌகிகமல்லவா? இந்தக் கல்யாணம் நடக்குமா இல்லை நடக்காதா? முடிவு தெரியவில்லை.

அவைகளுக்கெல்லாம் நான் அன்று ஒரு வகையாக விடைகண்டு பிடித்துவிட்டேன். ஆனலும் என்ன? அந்த 'மணப் பரீக்ஷை'யின் கேள்விகளுக்கு பதில் நான் கண்டு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், அங்கு நடந்தவைகள் எல்லாம் அந்தக் கேள்வியையும் மனத்தில் எழுப்பி, பதிலையும் கண் முன்னர் நிதர்சனமாகக் காட்டி விட்டது.